[1972 மார்ச் 22

கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகள்.

* 620 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை, குடந்தை, மாயூரம் கல்லூரிகளில் மாலை நேரக் கல்லூரி வகுப்புக்களைத் துவக்க திட்டமேதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தஞ்சாவூரிலுள்ள அரசர் சரபோஜி அரசினர் (ஆண்கள்) கலைக் கல்லூரியிலும், குடந்தையிலுள்ள அரசினர் (ஆண்கள்) கலைக் கல்லூரியிலும் ஏற்கனவே மாலை நேரக் கல்லூரிகள் உள்ளன. குடந்தை அரசினர் பெண்கள் கல்லூரியிலும், சில ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட தஞ்சை அரசினர் பெண்கள் கல்லூரியிலும், மாயூரம் ஞானம்பிகை அரசினர் (பெண்கள்) கலைக் கல்லூரியிலும் மாலை நேரக் கல்லூரிகள் துவங்குவது பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, புதுக் கல்லூரிகள் துவங்குவதற்குத் தேவைப்படும் பணம், கட்டடங்கள் ஆகிய நிலைமைகளைத் தவிர்க்கும் பொருட்டு மாலைநேரக் கல்லூரிகளை அதிக அளவில் துவங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாலை நேரக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கும் அளவிற்கு ஓரளவு ஆதரவு இருக்கிறது என்று விண்ணப்பங்கள் அரசுக்கு வருமேயானால் அவற்றைப் பரிசீலித்து மாலை நேரக் கல்லூரிகள் துவங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி : மாலை நேரக் கல்லூரிகளில் பல இடங்களில் பணிபுரியும் ஊழியர்கள் படிக்கிறார்கள். அதில் பல ஊழியர்கள் ஏற்கனவே பி.யு.ஸி. படித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்புகளில் சேர்ந்து படிக்க நினைக்கிறார்கள். ஆனால் மாலைநேரக் கல்லூரிகளில் ஆர்ட் சப்ஜெக்ட்ஸ் மட்டும்தான் சொல்லித் தரப்படுகிறது. ஸயன்ஸ் சப்ஜக்ட்ஸ் சொல்லித் தருவதில்லை. எனவே மாலை நேரக் கல்லூரிகளில் ஸயன்ஸ் ஸப்ஜெக்டஸ்-ம் சொல்லிக் கொடுப்பதற்கு முயற்சி எடுக்குமா?

1972 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சில இடங்களில் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதுபற்றி ஆராய்ந்து அதில் இடர்பாடுகள் இருக்குமானுல் அதைக் களையச் செய்வதற்கு வேண்டியதைச் செய்யலாம். என்ன முறைகள் உள்ளன என்பது பற்றி பல்கலைக் கழகத்தோடு கலந்து ஆலோசித்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

தமிழ்நாடு புலவர்க் குழு.

* 621 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் புலவர்க் குழு அலுவலகக் கட்டட நிதிக்காக அரசு மானியம் வழங்கியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். ரூ.25,000-ஐ தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, முன்பிருந்த மாநில அரசு ஆஸ்தானக் கவிஞர்களை நியமித்தது போல் இந்தப் புலவர் குழுவிலிருந்து ஒருவரை அரசவைக் கவிஞர் என்று நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தப் பேரவையில் பல ஆஸ்தான புலவர்கள் இருக்கிறுர்கள். ஆகவே, தனியாக ஆஸ்தானப் புலவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் நிதி அளித்திருப்பதாகச் சொன்னுர்கள். அந்தக் கட்டடம் எங்கே கட்டப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தப் புலவர் குழுவினர் தமிழ்நாட்டின் மையப் பகுதியாக விளங்குகிற திருச்சியில் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறுர்கள். ரூபாய் 1 லட்சத்திற்கு திட்டம் போட்டு, ஏறக்குறைய ரூ. 48,000 திரட்டியிருக்கிறுர்கள். அரசு ரூ. 25,000 அளித்து இருக்கிறது. விரைவில் திருச்சியில் அமைக்கப் போகிறுர்கள்.